## இனிமையான குழந்தைகளே! (ஆத்ம அபிமானி) ஆத்ம உணர்வில் இருப்பதற்கான பயிற்சி செய்தீர்கள் என்றால் தெய்வீக குணங்கள் வந்து கொண்டே இருக்கும், தவறான சிந்தனைகள் நீங்கிப் போய் விடும். அளவற்ற குஷி இருக்கும்.

கேள்வி: தங்களது நடத்தையை திருத்திக் கொள்வதற்கு அல்லது அளவற்ற குஷியில் இருப்பதற்காக எந்த ஒரு விஷயத்தை எப்பொழுதும் கவனத்தில் கொள்ள வேண்டும்?

பதில்: நாம் தெய்வீக சுயராஜ்யத்தை ஸ்தாபனை செய்து கொண்டிருக்கிறோம். நாம் மரண உலகத்தை விடுத்து அமரலோகத்திற்குச் சென்று கொண்டிருக்கிறோம் என்பது எப்பொழுதும் நினைவில் இருக்கட்டும்- இதனால் மிகுந்த குஷி இருக்கும். நடத்தை கூட திருந்திக் கொண்டே போகும். ஏனெனில் அமர லோகமான புது உலகத்திற்குச் செல்ல வேண்டும் என்றால் அவசியம் தெய்வீக குணங்கள் வேண்டும். சுயராஜ்யம் பெற வேண்டும் என்றால் அனேகருக்கு நன்மையும் செய்ய வேண்டி இருக்கும். அனைவருக்கும் வழி கூற வேண்டி இருக்கும்.

ஓம் சாந்தி. குழந்தைகள் தங்களை இங்கு இருப்பவர்களாக நினைக்கக் கூடாது. இராம இராஜ்யம் அல்லது சூரிய வம்ச இராஜ்யம் என்று அழைக்கப்படும் நம்முடைய இராஜ்யத்தில் எவ்வளவு சுகம் சாந்தி இருந்தது என்பது உங்களுக்குத் தெரிய வந்துள்ளது. இப்பொழுது நாம் மீண்டும் தேவதை ஆகிக் கொண்டிருக்கிறோம். இதற்கு முன்பும் ஆகி இருந்தோம். நாம் தான் சர்வ குணங்கள் நிறைந்தவர்களாக.... தெய்வீக குணங்கள் உடையவர்களாக இருந்தோம். நாம் நம்முடைய இராஜ்யத்தில் இருந்தோம். இப்பொழுது இராவண இராஜ்யத்தில் இருக்கிறோம். நாம் நம்முடைய இராஜ்யத்தில் மிகவும் சுகமுடையவர்களாக இருந்தோம். எனவே உள்ளுக்குள் மிகுந்த குஷி மற்றும் நிச்சயம் இருக்க வேண்டும். ஏனெனில் நீங்கள் மீண்டும் உங்களது இராஜதானியில் சென்று கொண்டிருக்கிறீர்கள். இராவணன் உங்களது இராஜ்யத்தைப் பறித்து விட்டுள்ளான். நம்முடையது நமக்கே சொந்தமான சூரியவம்ச இராஜ்யமாக இருந்தது என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள். நாம் இராம இராஜ்யத்தினுடையவராக இருந்தோம். நாம் தான் தெய்வீக குணங்கள் உடையவர்களாக இருந்தோம். நாம் தான் மிகவும் சுகம் உடையவர்களாக இருந்தோம். பிறகு இராவணன் நமது இராஜ்ய பாக்கியத்தைப் பறித்து விட்டான். இப்பொழுது தந்தை வந்து தன்னுடைய மற்றும் அந்நியனுடையது பற்றிய ரகசியத்தைப் புரிய வைக்கிறார். அரைக் கல்பம் நாம் இராம இராஜ்யத்தில் இருந்தோம். பிறகு அரைக்கல்பம் நாம் இராவண இராஜ்யத்தில் இருந்தோம். குழந்தைகளுக்கு ஒவ்வொரு விஷயத்திலும் நிச்சயம் இருந்தது என்றால் குஷியில் இருப்பார்கள் மற்றும் நடத்தையும் திருந்தும். இப்பொழுது அந்நிய தேசத்தில் நாம் மிகவும் துக்கமுடையவர்களாக இருக்கிறோம். இந்துக்களான பாரதவாசிகள் நாம் அந்நிய (ஆங்கிலேயர் ஆட்சி) இராஜ்யத்தில் துக்கமுடையவர்களாக இருந்தோம். இப்பொழுது நம்முடைய இராஜ்யத்தில் சுகமுடையவர்களாக இருக்கிறோம் என்று நினைக்கிறார்கள். ஆனால் இது குறுகிய கால காக்கை எச்சிலுக்கு சமானமான சுகம் ஆகும். குழந்தைகளாகிய

நீங்கள் இப்பொழுது சதா காலத்திற்கான சுகமான உலகிற்குச் சென்று கொண்டிருக்கிறீர்கள். எனவே குழந்தைகளாகிய உங்களுக்குள் மிகவும் குஷி இருக்க வேண்டும். ஞானத்தில் இல்லை என்றால் கல்-மண் போன்ற புத்தி உடையவர்கள் என்பது போலாகும். நாம் அவசியம் நமது இராஜ்யத்தை பெறுவோம். இதில் கடினமான விஷயம் எதுவும் கிடையாது என்பதை குழந்தைகளாகிய நீங்கள் அறிந்துள்ளீர்கள். ஆட்சி பெற்றோம். பின் அரைக் கல்பம் ஆட்சி புரிந்தீர்கள். பிறகு இராவணன் நமது கலைகளை (மேன்மை) இல்லாமல் செய்து விட்டான். ஏதாவதொரு நல்ல குழந்தையின் நடத்தை கெட்டு விடும் பொழுது உங்களது மேன்மை இல்லாமல் போய் விட்டதா (கெட்டுப் போய்) என்று கூறப்படுகிறது. இது எல்லையில்லாத விஷயம் ஆகும். மாயை நம்முடைய மேன்மையை இல்லாமல் செய்து விட்டது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். நாம் விழுந்து கொண்டே வந்தோம். இப்பொழுது எல்லையில்லாத தந்தை தெய்வீக குணங்களைக் கற்பிக்கிறார். எனவே அளவு கடந்த குஷி இருக்க வேண்டும். ஆசிரியர் நாலேஜ் (ஞானம்) அளிக்கும் பொழுது மாணவருக்கு குஷி ஏற்படுகிறது. இது எல்லையில்லாத நாலேஜ் (ஞானம்) ஆகும். எனக்குள் எந்த ஒரு அசுர குணம் ஒன்றும் இல்லையே என்று நம்மையே நாம் பார்க்க வேண்டும். சம்பூர்ணமாக ஆகவில்லை என்றால் தண்டனைகள் வாங்க வேண்டி வரும். ஆனால் நாம் ஏன் தண்டனை வாங்க வேண்டும். சர்வகுணம் சம்பன்னம்... என்று பாடுகிறார்கள். எனவே புருஷார்த்தம் (முயற்சி) செய்து அவ்வாறு ஆக வேண்டும். அவ்வாறு ஆவதில் உழைப்பு தேவைப்படுகிறது. குற்றப் பார்வை ஏற்பட்டு விடுகிறது. தன்னை ஆத்மா என்று உணர்ந்தீர்கள் என்றால் குற்றமான சிந்தனை இல்லாமல் போய் விடும் என்று தந்தை கூறுகிறார். யுக்திகளோ தந்தை நிறைய புரிய வைக்கிறார். யாருக்குள் தெய்வீக குணம் உள்ளதோ அவர்களுக்கு தேவதை என்று கூறப்படுகிறது. யாருக்குள் இல்லையோ அவர்கள் மனிதர்கள் என்று அழைக்கப்படு கின்றனர். இருவருமே மனிதர்கள் தான். ஆனால் தேவதைகளை ஏன் பூஜிக்கிறார்கள்? ஏனெனில் அவர்களிடம் தெய்வீக குணங்கள் உள்ளது. மேலும் அவர்களுடைய (மனிதர்களினுடைய) செயல்கள் குரங்கு போல உள்ளது. எவ்வளவு தங்களுக்குள் சண்டை சச்சரவில் ஈடுபடுகிறார்கள். சத்யுகத்தில் இது போன்ற விஷயங்கள் ஆவதில்லை. இங்கே நடக்கிறது? அவசியம் தங்களுடைய தவறு ஆகும் பொழுது சகித்துக் கொள்ள வேண்டி வருகிறது. நீங்கள் எந்த அளவிற்கு ஆத்ம உணர்வுடையவராக (ஆத்ம அபிமானி) ஆகிக் கொண்டே செல்வீர்களோ அந்த அளவு தெய்வீக குணங்களும் தாரணை ஆகும். எனக்குள் தெய்வீக குணங்கள் இருக்கிறதா என்று நம்மையே நாம் சோதிக்க வேண்டும். தந்தை சுகமளிக்கும் வள்ளல் ஆவார். எனவே அனைவருக்கும் சுகம் அளிப்பதே குழந்தைகளின் காரியம் ஆகும். நாம் யாருக்கும் துக்கம் ஒன்றும் கொடுப்பதில்லையே என்று நமது மனதையே கேட்க வேண்டும். ஆனால் ஒரு சிலருக்கு எப்பேர்ப்பட்ட பழக்கம் இருக்கும் என்றால் அவர்களால் துக்கம் கொடுக்காமல் இருக்க முடியாது. முற்றிலுமே திருந்துவதில்லை. சிறைப் பறவைகளைப் போல அவர்கள் சிறையிலேயே தாங்கள் சுகமாக இருப்பதாக நினைக்கிறார்கள். அங்கோ சிறை ஆகியவை இருக்கவே இருக்காது என்று தந்தை கூறுகிறார். சிறைக்குச் செல்லும் வகையில் பாவங்கள் ஆவதே இல்லை. இங்கு சிறையில் தண்டனைகள் அனுபவிக்க வேண்டி வருகிறது. நாம் நமது இராஜ்யத்தில் இருக்கும் பொழுது மிகவும் செல்வந்தராக இருந்தோம் என்பதை இப்பொழுது நீங்கள் புரிந்துள்ளீர்கள். யார் பிராமண குலத்தினராக

இருப்பவர்களோ அவர்கள் தான் தமது இராஜ்யத்தை ஸ்தாபனை செய்து கொண்டி ருக்கிறோம் என்று புரிந்திருப்பார்கள். அது நமது ஒரே ஒரு இராஜ்யமாக இருந்தது. அது தேவதை களின் இராஜ்யம் என்று கூறப்படுகிறது. ஆத்மாவிற்கு ஞானம் கிடைக்கும் பொழுது குஷி ஏற்படுகிறது. ஜீவ ஆத்மா என்று அவசியம் கூற வேண்டும். நாமாகிய ஜீவ ஆத்மாக்கள் தேவி தேவதா தர்மத்தினராக இருக்கும் பொழுது முழு உலகத்தில் நமது இராஜ்யம் இருந்தது. இந்த ஞானம் (நாலேஜ்) உங்களுக்கானதாகும். நமது இராஜ்யம் இருந்தது. நாமும் சதோபிரதானமாக இருந்தோம் என்று பாரதவாசிகள் சிறிதும் புரிந்துக் கொள்வதில்லை. நீங்கள் தான் இந்த முழு ஞானத்தைப் புரிந்து கொள்கிறீர்கள். எனவே நாம் தான் தேவதையாக இருந்தோம் மற்றும் நாம் தான் இப்பொழுது ஆக வேண்டும். தடைகள் கூட ஏற்படுகின்றன என்றாலும் கூட நாளுக்கு நாள் உங்களுடைய முன்னேற்றம் ஆகிக் கொண்டே போகும். உங்களுடைய பெயர் புகழடைந்து கொண்டே போகும். இது நல்ல நிறுவனம் ஆகும். நல்ல காரியம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று எல்லோரும் புரிந்து கொள்வார்கள். மிகவும் எளிதான வழி கூறுகிறார்கள் என்பார்கள். நீங்கள் தான் சதோபிரதானமாக இருந்தீர்கள். தேவதையாக இருந்தீர்கள். உங்கள் இராஜதானியில் இருந்தீர்கள் என்று கூறுகிறார். இப்பொழுது தமோ பிரதானமாக ஆகி உள்ளீர்கள். வேறு யாரும் தங்களை இராவண இராஜ்யத்தில் இருப்பதாக புரிந்து கொள்வதில்லை.

நாம் எவ்வளவு தூய்மையாக இருந்தோம். இப்பொழுது கீழ்த்தரமானவர்களாக ஆகி உள்ளோம். புனர் ஜென்மம் எடுத்து எடுத்து தங்க புத்தியிலிருந்து கல் புத்தியாக ஆகி விட்டுள்ளோம். இப்பொழுது நாம் நமது இராஜ்யத்தை ஸ்தாபனை செய்து கொண்டிருக்கிறோம். எனவே உங்களுக்கு மகிழ்ச்சி இருக்க வேண்டும். புருஷார்த்தத்தில் ஈடுபட்டு விட வேண்டும். யார் முந்தைய கல்பத்தில் ஈடுபட்டிருப்பார்களோ அவர்கள் இப்பொழுதும் அவசியம் ஈடுபடுவார்கள். வரிசைக்கிரமமாக முயற்சிக்கேற்ப நாம் நமது தெய்வீக இராஜ்யத்தை ஸ்தாபனை செய்து கொண்டிருக்கிறோம். இதையும் நீங்கள் அடிக்கடி மறந்து விடுகிறீர்கள். இல்லையென்றால் உள்ளுக்குள் மிகுந்த குஷி இருக்க வேண்டும். மன்மனாபவ என்பதையே ஒருவருக்கொருவர் நினைவூட்டுங்கள். தந்தையை நினைவு செய்யுங்கள். அதன் மூலமாகத் தான் இப்பொழுது இராஜ்யத்தைப் பெறுகிறோம். இது ஒன்றும் புதிய விஷயம் அல்ல. கல்ப கல்பமாக நமக்கு தந்தை ஸ்ரீமத் தருகிறார். அதன் மூலம் நாம் தெய்வீக குணங்களை தாரணை செய்கிறோம். இல்லை யென்றால் தண்டனைகள் வாங்கி பிறகு குறைவான பதவி பெறுவோம். இது மிக பெரிய லாட்டரி ஆகும். இப்பொழுது முயற்சி செய்து உயர்ந்த பதவி அடைந்தீர்கள் என்றால் ஒவ்வொரு கல்பத்திலும் அடைந்து கொண்டே இருப்பீர்கள். தந்தை எவ்வளவு எளிதாகப் புரிய வைக்கிறார். பாரதவாசிகளாகிய நீங்கள் தான் தேவதைகளின் இராஜதானியில் இருந்தீர்கள். பிறகு புனர் ஜென்மம் எடுத்து எடுத்து கீழே படி இறங்கி இறங்கி இது போல ஆகி உள்ளீர்கள் என்று கண்காட்சி யிலும் இதையே புரிய வைத்துக் கொண்டிருங்கள். எவ்வளவு சகஜமாக புரிய வைக்கிறார். சுப்ரீம் (உயர்ந்த) தந்தை, சுப்ரீம் ஆசிரியர். சுப்ரீம் குரு ஆவார் அல்லவா? நீங்கள் எவ்வளவு ஏராளமான மாணவர்கள் இருக்கிறீர்கள். முன்னேறிக் கொண்டே இருக்கிறீர்கள். எத்தனை பேர் நிர்விகாரி தூய்மை ஆகி உள்ளீர்கள் என்று பாபா

கூட பட்டியல் (லிஸ்ட்) கேட்டு வாங்கிக் கொண்டே இருக்கிறார்.

புருவ மத்தியில் ஆத்மா பிரகாசிக்கிறது என்பது குழந்தைகளுக்குப் புரிய வைக்கப்பட்டுள்ளது. நான் கூட இங்கு வந்து அமருகிறேன் என்று தந்தை கூறுகிறார். எனது பாகத்தை நடிக்கிறேன். தூய்மை இல்லாதவர்களை தூய்மை ஆக்குவதே என்னுடைய பாகம் ஆகும். ஞானக் கடல் ஆவேன். குழந்தைகள் பிறக்கிறார்கள். ஒரு சிலரோ மிகவும் நல்லவர்களாக இருக்கிறார்கள். ஒரு சிலர் கெட்டவர்களாகவும் வெளிப்படுகிறார்கள். பிறகு ஆச்சரியப்படும் வகையில் கேட்டார்கள், (பிறருக்கும்) கூறினார்கள் மற்றும் ஓடிப் போய் விடுபவர்களாக ஆகி விடுகிறார்கள். அட! மாயையே நீ எவ்வளவு பிரபலமாக இருக்கிறாய்? பிறகும் தந்தை கூறுகிறார்-ஓடியவராக ஆன பிறகும் எங்கு செல்வார்கள்? இதே சத்கதி தாதாவிடம் தான். மற்றபடி ஒரு சிலருக்கு இந்த ஞானம் பற்றி முற்றிலுமே தெரியாது. யார் முந்தைய கல்பத்தில் ஏற்றிருக்கிறார்களோ அவர்களே ஏற்றுக் கொள்வார்கள். இதில் நமது நடத்தையை மிகவுமே திருத்திக் கொள்ள வேண்டி உள்ளது. சேவை செய்ய வேண்டி உள்ளது. அனேகருக்கு நன்மை செய்ய வேண்டும். அனேகருக்குப் போய் வழி கூற வேண்டும். பாரதவாசிகளாகிய நீங்கள் தான் உலகத்தின் அதிபதியாக இருந்தீர்கள், இப்பொழுது மீண்டும் இவ்விதமாக உங்களது ராஜ்யத்தை அடைய முடியும் என்பதை மிக மிக இனிமையான வார்த்தைகளால் புரிய வைக்க வேண்டும். தந்தை புரிய வைப்பது போல வேறு யாரும் புரிய வைக்க முடியாது என்பதையோ நீங்கள் புரிந்துள்ளீர்கள். பிறகு போகப் போக மாயையிடம் தோல்வி அடைந்து விடுகிறார்கள். விகாரங்கள் மீது வெற்றி அடைவதாலேயே நீங்கள் உலகத்தை வென்றவர் ஆவீர்கள் என்று சுயம் தந்தை கூறுகிறார். இந்த தேவதைகள் உலகை வென்றவராக ஆகி உள்ளார்கள் என்றால் அவசியம் அவர்கள் அப்பேர்ப்பட்ட கர்மம் செய்துள்ளார்கள். தந்தை கர்மங்களின் கதி (விளைவு) பற்றிக் கூட கூறியுள்ளார். இராவண இராஜ்யத்தில் கர்மம் விகர்ம மாகத் தான் ஆகிறது. இராம இராஜ்யத்தில் கர்மம் அகர்மமாக ஆகிறது. முக்கியமான விஷயம் காமத்தின் மீது வெற்றி அடைந்து உலகத்தை வென்றவராக ஆவதாகும். தந்தையை நினைவு செய்யுங்கள். இப்பொழுது வீடு திரும்பிச் செல்ல வேண்டும். நாம் நமது இராஜ்யத்தை அடைந்தே தீருவோம் என்று நமக்கு 100 சதவிகிதம் உறுதி உள்ளது. ஆனால் இங்கு ஆட்சி புரிய மாட்டோம். இங்கு இராஜ்யத்தைப் பெறுகிறோம். அமரலோகத்தில் ஆட்சி புரிவோம். இப்பொழுது மரண உலகம் மற்றும் அமரலோகத்திற்கு நடுவில் உள்ளோம். இதையும் மறந்து விடுகிறார்கள். எனவே தந்தை அடிக்கடி நினைவூட்டுகிறார். நாம் நமது இராஜ்யத்திற்கு செல்வோம் என்ற உறுதியாக நிச்சயம் இப்பொழுது உள்ளது. இந்த பழைய இராஜதானி அவசியம் முடியப் போகிறது. இப்பொழுது புது உலகம் செல்ல வேண்டும் என்றால் அவசியம் தெய்வீக குணங்களைத் தாரணை செய்ய வேண்டும். நம்மிடமே நாம் உரையாட வேண்டும். நம்மை ஆத்மா என்று உணர வேண்டும். ஏனெனில் இப்பொழுது தான் நாம் திரும்பிச் செல்ல வேண்டும். எனவே இப்பொழுது தான் நம்மை ஆத்மா என்றும் உணர வேண்டும். திரும்பிச் செல்ல வேண்டும் என்பதற்கான இந்த ஞானம் பிறகு எப்பொழுதாவது கிடைக்குமா என்ன? அங்கு நாம் யோகம் செய்ய வேண்டிய அவசியமில்லை காரணம் 5 விகாரங்களே இருக்காது. இப்பொழுது தான் தூய்மை ஆவதற்காக யோகம் செய்ய வேண்டி உள்ளது. அங்கோ எல்லோரும் திருந்தியவர்களாக இருப்பார்கள். பிறகு மெது மெதுவாக

கலை குறைந்து கொண்டே போகிறது. இதுவோ மிகவும் சகஜமானது. கோபம் கூட ஒருவருக்கு துக்கம் கொடுக்கிறது அல்லவா? முக்கியமானது தேக அபிமானம் ஆகும். அங்கோ தேக அபிமானம் இருப்பதே இல்லை. ஆத்ம அபிமானி ஆவதால் குற்றப் பார்வை இருக்காது. தூய பார்வை ஆகிவிடுகிறது. இராவண இராஜ்யத்தில் குற்றப் பார்வை ஆகி விடுகிறது. நாம் நமது இராஜ்யத்தில் மிகவும் சுகமாக இருப்போம் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள். எந்த காமமும் இல்லை. எந்த கோபமும் இல்லை. இது பற்றி ஆரம்பத்தில் பாட்டு கூட அமைக்கப்பட்டிருந்தது. அங்கு இந்த விகாரம் இருப்பதில்லை. அநேக முறை நம்முடைய இந்த வெற்றி தோல்வி ஏற்பட்டுள்ளது. சத்யுகம் முதல் கொண்டு கலியுகம் வரை எது நடந்ததோ அது மீண்டும் திரும்ப நடைபெறும். தந்தை அல்லது ஆசிரியரிடம் இருக்கும் ஞானத்தை அவர் உங்களக்குக் கூறிக் கொண்டே இருக்கிறார். இந்த ஆன்மீக ஆசிரியர் கூட அதிசயமானவர் ஆவார். உயர்ந்ததிலும் உயர்ந்தவர் பகவான். உயர்ந்ததிலும் உயர்ந்த ஆசிரியரும் ஆவார். மேலும் நம்மையும் உயர்ந்ததிலும் உயர்ந்த தேவதையாக ஆக்குகிறார். தந்தை எவ்வாறு தேவதா தர்மத்தை ஸ்தாபனை செய்து கொண்டி ருக்கிறார் என்பதை சுயம் நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். சுயம் நீங்களே தேவதை ஆகிக் கொண்டிருக்கிறீர்கள். இப்பொழுதோ எல்லோரும் தங்களை இந்து என்று கூறிக் கொண்டே இருக்கிறார்கள். உண்மையில் ஆதி சனாதன தேவி தேவதா தர்மம் ஆகும் என்று அவர்களுக்கும் புரிய வைக்கப் படுகிறது. மற்ற எல்லா தர்மங்களும் நடந்து கொண்டு தான் இருக்கிறது. இந்த ஒரே ஒரு தேவி தேவதா தர்மம் தான் பெரும்பாலும் மறைந்து விட்டுள்ளது. இதுவோ மிகவும் தூய்மையான தர்மம் ஆகும். இது போன்ற தூய்மையான தர்மம் எதுவும் இருக்காது. இப்பொழுது தூய்மையில்லாத காரணத்தால் யாருமே தங்களை தேவதை என்று அழைத்துக் கொள்ள முடிய வில்லை. நாம் தேவி தேவதா தர்மத்தினராக இருந்தோம். அதனால் தான் தேவதைகளை பூஜிக்கிறோம் என்று நீங்கள் புரிய வைக்கலாம். கிறிஸ்துவைப் பூஜிப்பவர்கள் கிறித்தவர்கள் ஆகிறார்கள். புத்தரை பூஜிப்பவர்கள் பௌத்தர்கள் ஆகிறார்கள். தேவதைகளைப் பூஜிப்பவர்கள் தேவதை ஆகிறார்கள். பிறகு தங்களை இந்து என்று ஏன் அழைத்து கொள்கிறீர்கள்? யுக்தியுடன் புரிய வைக்க வேண்டும். இந்து தர்மம் என்ற தர்மம் இல்லை என்று மட்டும் கூறினால் கோபப்படுவார்கள். இந்து ஆதி சனாதன தர்மத்தினராக இருந்தோம் என்று கூறுங்கள். அப்பொழுது ஆதி சனாதன தர்மமோ இந்து ஒன்றும் அல்ல என்று கொஞ்சம் புரிந்து கொள்வார்கள். ஆதிசனாதன என்ற வார்த்தை சரியானது ஆகும். தேவதைகள் தூய்மையானவர்களாக இருந்தார்கள். இவர்கள் இங்கே தூய்மை இல்லாதவர்களாக உள்ளார்கள். எனவே தங்களை தேவதை என்று அழைத்துக் கொள்ள முடியவில்லை. கல்ப கல்பமாக இவ்வாறு ஆகிறது. இவர்களது இராஜ்யத்தில் எவ்வளவு செல்வந்தர்களாக இருந்தார்கள். இப்பொழுதோ ஏழையாக ஆகி விட்டுள்ளார்கள். அவர்கள் கோடீசுவரராக இருந்தார்கள். தந்தை மிகவும் நல்ல யுக்திகள் சொல்கிறார். நீங்கள் சத்யுகத்தில் இருப்பவர்களா இல்லை கலியுகத்திலா என்று கேட்கப்படுகிறது. கலியுகத்தினர் என்றால் அவசியம் நரகவாசியாக இருக்கின்றீர்கள். சத்யுகத்தில் இருப்பவர்களோ சொர்க்கவாசி தேவதைகளாக இருப்பார்கள். இவ்வாறு கேள்வி கேட்டீர்கள் என்றால் அவசியம் கேள்வி கேட்பவர்கள் சுயம் நம்மை தேவதையாக மாற்றக் கூடியவர்களாக இருப்பார்கள் என புரிந்துக் கொள்வார்கள். வேறு யாரும் இவ்வாறு கேட்க முடியாது. அந்த பக்தி மார்க்கமே தனியானது ஆகும். பக்தியின்

பலன் என்ன? அது தான் ஞானம் ஆகும். சத்யுக திரேதாவில் பக்தி இருப்பதில்லை. ஞானத்தினால் அரைக் கல்பம் பகல், பக்தியினால் அரைக் கல்பம் இரவு. ஏற்கக் கூடியவர்களாக இருந்தார்கள் என்றால் ஏற்றுக் கொள்வார்கள். ஏற்காதவர்களாக இருக்கிறார்கள் என்றால் ஞானத்தையும் ஏற்க மாட்டார்கள் பிறகு பக்தியையும் ஏற்க மாட்டார்கள். பைசா சம்பாதிப்பது மட்டுமே அறிந்திருப்பார்கள். குழந்தைகளான நீங்களோ யோக பலத்தினாலே இப்பொழுது இராஜ்யத்தை ஸ்ரீமத் படி ஸ்தாபனை செய்து கொண்டிருக்கிறீர்கள். பிறகு அரைக் கல்பத்திற்குப் பிறகு இராஜ்யத்தை இழக்கவும் செய்கிறீர்கள். இந்த சுழற்சி நடந்து கொண்டே இருக்கிறது. நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் வெகுகாலம் கழித்து கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு, தாய் தந்தை பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. அநேகருக்கு நன்மை செய்ய வேண்டும் என்றால் நமது சொற்கள் மிகவும் இனிமையானதாக ஆக்க வேண்டும். இனிமையான சொற்கள் மூலம் சேவை செய்ய வேண்டும். சகிப்புத் தன்மைஉடையவராக ஆக வேண்டும்.

2. கர்மங்களின் ஆழமான விளைவைப் புரிந்து கொண்டு, விகாரங்கள் மீது வெற்றி அடைய வேண்டும். உலகத்தை வென்ற தேவதை ஆக வேண்டும். ஆத்ம அபிமானி ஆகி குற்றப் பார்வையை தூய்மையானதாக ஆக்க வேண்டும்.

வரதானம் : சிரேஷ்ட கர்மம் மூலம் தெய்வீக குணங்கள் என்ற பிரபுவின் பிரசாதத்தை பகிர்ந்து கொடுக்கக் கூடிய ஃபரிஷ்தாவிலிருந்து, தேவதையாக ஆகுக.

நிகழ்கால சமயத்தில் அஞ்ஞானி ஆத்மாக்கள் ஆகட்டும், பிராமண ஆத்மாக்கள் ஆகட்டும், இருவருக்கும் குண தானத்தின் அவசியம் உள்ளது. இப்பொழுது இந்த விதியை தன்னிடத்தில் மற்றும் பிராமண பரிவாரத்தில் தீவிரமாக்குங்கள். இந்த தெய்வீக குணம் அனைத்தையும் விட சிரேஷ்டமான பிரபுவின் பிரசாதம் ஆகும். இந்த பிரசாதத்தை நன்கு பகிர்ந்து கொடுங்கள். எவ்வாறு அன்பின் அடையாளமாக ஒருவருக்கொருவர் டோலி கொடுக்கின்றீர்களோ, அதுபோல் தெய்வீக குணங்கள் என்ற டோலி கொடுங்கள். இந்த விதியினால் ஃபரிஷ்தாவிலிருந்து தேவதை ஆகுவதற்கான இலட்சியம் சகஜமாக அனைவரிடத்திலும் வெளிப்படையாகத் தென்படும்.

சுலோகன்: யோகம் என்ற கவசத்தை அணிந்து கொண்டிருந்தீர்கள் என்றால், மாயை என்ற எதிரி யுத்தம் செய்ய முடியாது.